விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 283 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 11 வெள்ளிக்கிழமை (27.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன்
# தியாகி திலீபனின் நினைவேந்தல்



**(யாழ்ப்பாணம்)**
**தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.**

தமிழின விடுதலைக்காய் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு துளி நீர், ஒரு பருக்கை உணவு கூட உட்கொள் ளாது நெஞ்சில் கொள்கைப் பிடிப்போடு 12 நாட்கள் அகிம்சை வழியில் உண்ணா நோன்பு நோற்றுத் தனதுடலை ஆகுதி யாக்கிய தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர் 11

## பாராளுமன்றம் கலைந்ததால் ஒய்வூதியம் இழந்த 85 உறுப்பினர்கள்

03ஆம் பக்கம் பார்க்க



## மருத்துவர் அர்ச்சுனா கைதாகி விளக்கமறியலில்

07ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலையில் திலீபனுக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)
ஐந்து அம்சக் கோரிக் கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணா விரதம் இரு ந்து உயிர்நீத்த 11

## மதுபானசாலைக்கான
# அனுமதி பெற்றவர்கள் விபரம் வெளியிடப்படும்
### ஜே.வி.பி உறுப்பினர் வசந்த

(கொழும்பு)
மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியல் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய மக்கள் 11

# விவசாயிகள், மீனவர்களுக்கு மானியம் வழங்குங்கள்
## ஜனாதிபதி அநுர பணிப்பு



**(கொழும்பு)**
**விவசாயிகள், மீனவர்களுக்கு மானியம் வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன்படி விவசாயிகளுக்கு உரமானிய மும் மீனவர்களுக்கு எரிபொருள் மானிய மும் வழங்கப்படவுள்ளது.**

*(04ஆம் பக்கம் பார்க்க)*

## மன்னாரில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(மன்னார்)
மன்னாரில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.
இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்குட் 11

# பொருளாதார முன்னேற்றத்துக்கு தொடர்ந்து ஒத்துழைப்போம்
## அநுரவுக்கான வாழ்த்தில் உலக வங்கி

(கொழும்பு)
இலங்கையின் பொருளா தார முன்னேற்றத்துக்கு தொடர்ந்து ஒத்துழைப்போம் என ஜனாதிபதி அநுரவுக் கான வாழ்த்தில் உலக வங்கி தெரிவித்துள்ளது.
உலக வங்கியின் தெற்காசிய வலயத் 11

## பண்ணையில் மோ.சைக்கிள் விபத்து
### குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)
பண்ணைப் பாலத்துக்கு அருகே இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் 11

## பாடசாலை நிகழ்வுகளுக்கு
# அரசியல்வாதிகளை அழைக்க வேண்டாம்
### பிரதமர் ஹரினி

(யாழ்ப்பாணம்)
பாடசாலை நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைக்க வேண்டாம் 11

## இன்று முதல் பழைய முறையில் விசா வழங்கப்படும்

(கொழும்பு)
இன்று முதல் பழைய முறைப்படி விசா வழங்கப் படும் என பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள் ளார். 11

# சாவகச்சேரியில் மோ.சை மதிலுடன் மோதி விபத்து
## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரியில் மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.
இதில் திருநெல்வேலிப் பகுதியை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டு விழாவும்



## திரு. கந்தசாமி சண்முகதாசன்

(பிரதி அதிபர் SLTS - I, விஞ்ஞானப் பட்டதாரி)

யா/வேலாயுதம் பள்ளிதனில்
பண்பும் பரிவும் கொண்டு
கதைகள் பல சொல்லி
கல கல சிரிப்புடன்
குழந்தைபோல் மனம் கொண்டு
குதூகலமாய் திரிந்தீரே
பௌதிகவியலைப் பண்போடு கற்பித்தீர்
பிரதி அதிபராய் பற்பல சேவைகள்
மாணாக்கர் மனம் மகிழ்வித்தீர்
ஆசான்களுடன் இதமாகப் பழகினீர்
இன்றுடன் பணி நிறைவு பெற்று
மணிவிழாக் காணும் நன்நாளில்
பல்லாண்டு காலம் பல
சௌபாக்கியங்களும் பெருக
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

வ/வவுனியா விபுலானந்த வித்தியாலயம்
18.01.1993 - 13.05.1993
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
14.05.1993 - 17.09.1998
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
18.09.1998 - 10.01.2001
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
11.01.2001 - 05.10.2002
யா/சிதம்பரக் கல்லூரி
06.10.2002 - 12.03.2013
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
13.03.2013 - 02.01.2019
யா/உடுத்துறை மகா வித்தியாலயம்
03.01.2019 - 16.03.2021
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
17.03.2021 - 27.09.2024

BEST WISHES

நலன்புரிச்சங்கம்
யா/வேலாயுதம் ம.வி. பருத்தித்துறை.

(C-1268)

# மணி விழா



## திருமதி குயின் ஆன் ஜோர்ஜியானா ஜோர்ஜ் வில்வராஜ்

36 வருடங்கள் (1988 - 2024)
பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றி 27.09.2024 இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி குயின் ஆன் ஜோர்ஜியானா ஜோர்ஜ் வில்வராஜ் ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

(2128)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



எமது வலயத்தின் நிதிக்கிளையில் கடமையாற்றும்
திருமதி.கதிர்காமினி நிரஞ்சன்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அவர்களின்
பாசமிகு தந்தையார்

## அமரர் கனகசபை இந்திரராஜா

அவர்களின் 31ம் நாள் நினைவு நாளான இன்று அவரது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
வடமராட்சி

(C-1267)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக காணிக்கிளையில்
அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி.கிஷ்ணா வக்சலா அவர்களின் பாசமிகு
தந்தையார்

## அமரர் வீரப்பன் இராசன்

மண்ணில் 14.04.1950 — விண்ணில் 25.09.2024

அவர்கள் 25.09.2024 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அவரது
ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயருடன்
பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை

(C-1256)

# ஐந்தாண்டு சென்றதுவோ அன்னையே !



தோற்றம் 11.01.1948 — மறைவு 23.09.2019

## அமரர் பரமேஸ்வரி பரராஜசிங்கம்

(திதி-அபரபக்க தசமி)

சிந்தையதில் அன்போடு பண்பும் ஓங்க
சிறப்புறவே மற்றவர்க்கும் வழியைக் காட்டி
முந்தைதவ பேறெனவே நாமும் எண்ண
முனைப்புறவே குடும்பம் உறவை காத்து
இந்தவுயர் பிறப்பினுக்கே மாண்பு சேர்த்து
ஈகையுயர் புகழுடனே வாழ்ந்த அன்னை
அந்தமிலா ஆதியருள் பற்றிச் சென்றார்
அவரருளின் திறத்தினில் நாம் வாழுவோமே !
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைக்கோயில்,
சின்னத்தாய்,
புலோலி தெற்கு ,புலோலி

குடும்பத்தினர்

(2130)

# மரண அறிவித்தல்



மலர்வு 05 - 11 - 1952

உதிர்வு 26 - 09 - 2024

## நவமணி நாகேந்திரம்

மாவை கலட்டி, கொல்லன் கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி நாகேந்திரம் அவர்கள் 26.09.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவமணி - இராசாத்தி தம்பதியரின் அன்பு மகனும் பொன்னர் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் பாசமிகு கணவரும், புஸ்பேந்திரன், கஜேந்திரன்(பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்), கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்கயற்கரசி, லோகேந்திரம், உதயகரசி, விசயகரசி, இராசேந்திரம், தர்மகுலசிங்கம், மனோகரராசா, பாசமலர், இன்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகரத்தினம், புனிதவதி, தர்மராஜா, இராசாத்தி, செல்வமணி, தம்பித்துரை, சுசிலா ஆகியோரின அன்பு மைத்துனரும் புவிதா, சிவரஞ்சினி, கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்னஜனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.09.2024 இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மம் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவை கலட்டி , கொல்லன் கலட்டி,
தெல்லிப்பழை

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக தீபத்தின் நினைவேந்தல்











ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37 ஆவது நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தியாகி தீலிபன் உயிர்நீத்த நேரம் காலை 10.48 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானது. மாவீரர்களின் சகோதரி, முன்னாள் போராளி பொதுச் சுடர் ஏற்றியதை தொடர்ந்து, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

(படங்கள்: சிவசாந்தன்)

# நாட்டில் 5,500 பெண்கள்

## மார்பகப் புற்றுநோயால் பாதிப்பு

## தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம்

(கொழும்பு)

**உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மார்பகப் புற்றுநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம் தெரிவித்துள்ளது.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் சமூக சுகாதார வைத்திய நிபுணர் ஹசரெலி பெர்னாண்டோ, மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அதனால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனத் தெரிவித்தார். இலங்கையில் வருடாந்தம் 5,000 இற்கும் அதிக மான மார்பகப் புற்று நோய்கள் பதிவாகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது மார்பகப் புற்றுநோயால் ஏற்படும் இறப்புகளின் சதவீதம் இலங்கையில் அதிகரித்துள்ளது.

இலங்கையில் சுமார் 5,500 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக் காட்டினார். (நி)

# ஓய்வூதியத்தினை இழந்துள்ள 85 பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

பாராளுமன்றம் முன் கூட்டி கலைக்கப்பட்டதன் காரணமாக 85 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஓய்வூதியத்தினை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு வர்த்தமானியூடாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 85 பேர் ஓய்வூதியத்தினை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

9 ஆவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில் குறித்த காலம் நிறைவடைவதற்கு முன்னதாக முன்கூட்டி கலைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்யும் உறுப்பினர் ஒருவருக்கு அவரது சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியமாக வழங்கப்படுகின்றது.

மேலும் 10 ஆண்டுகளை நிறைவு செய்யும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துடையவர்.

1977 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஓய்வூதிய சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

"சந்தையில் முட்டையின் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில் முட்டை தொடர்பான பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளையும் குறைக்க வேண்டும்" என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை தற்போது 28 முதல் 35 ரூபாய் வரை உள்ளதாக அதன் தலைவர் துசித இந்திரஜித் உடுவர தெரிவித்தார். அதன்படி, அந்த அனுகூலத்தை நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## ஸ்கந்தபுரம் சந்தை, ஆனைவிழுந்தான் சந்தை மற்றும் ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளிற்கான வைப்புப் பண கேள்வி அறிவித்தல் - 2024

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மக்களிடமிருந்து ஸ்கந்தபுரம் சந்தை, ஆனை விழுந்தான் சந்தை மற்றும் ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 27.09.2024 தொடக்கம் 10.10.2024 ஆம் திகதி வரை (அலுவலக நாட்களில் மு.ப 9.00 - பி.ப 01.00 வரை)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :- 11.10.2024 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 11.10.2024 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | வியாபாரத்தின் தன்மை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 01 | உள்ளூர் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 02 | கடை இல 02 | உள்ளூர் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 03 | கடை இல 04 | உள்ளூர் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 04 | கடை இல 05 | உள்ளூர் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 05 | கடை இல 06 | உள்ளூர் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 06 | கடை இல 07 | உள்ளூர் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |

**ஆனைவிழுந்தான் கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | வியாபாரத்தின் தன்மை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 01 | பல சரக்கு/ பான்சி/ புடவை/ Mobile & Electronical | 1,000.00 | 10,000.00 | 804,000.00 |
| 02 | கடை இல 02 | | 1,000.00 | 10,000.00 | 804,000.00 |

**ஸ்கந்தபுரம் கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | வியாபாரத்தின் தன்மை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 33 | பல சரக்கு / பான்சி / புடவை / Mobile & Electronical | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 02 | கடை இல 34 | | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 03 | கடை இல 35 | | 1,000.00 | 12,000.00 | 1,200,000.00 |
| 04 | கடை இல 36 | | 1,000.00 | 12,000.00 | 1,200,000.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 11.10.2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 11.10.2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கரைச்சி பிரதேசசபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராமசேவையாளரினால் உறுதிப் படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சிக்கு சமூகமளித்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப் படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரமுண்டு.

08. சித்திகரக் குத்தகைதாரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்று மாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகவும் செலுத்துதல் வேண்டும்.

09. கடையை வாடகைக்கு எடுப்பவரினாலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன்,மகள்).

10. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

11. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

12. சித்திகர கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

13. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

14. இவ் ஒப்பந்தம் தொடர்பாக சபையின் செயலாளரின் எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ /செயலாளரிற்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

15. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ.செல்வகுமார்,
செயலாளர்
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

(C-1262)

## விவசாயிகள்...

விவசாயிகளுக்கான உரமானியத்தை15,000 ரூபாயிலிருந்து 25 ,000 ரூபாயாக அதிகரிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கிணங்க இதுவரை ஹெக்டயருக்கு வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபாய் உரமானியம் 25,000 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளதோடு, இந்த மானியம் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இந்த மானியத்தை செயற்றிறனுடனும் திறம்படவும் கிடைக்கும் வகையில் குறித்த நிதியானது நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ள மீன்பிடித் தொழிலை ஊக்குவித்து, உற் பத்திச் செலவைக் குறைப்பதற்காக எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மீனவ சமூகத்திற்கு எரிபொருள் மானியத்தை வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி ஆழ்கடல் மற்றும் நாளாந்தப் படகுகளுக்கு மாதாந்த அடிப்படையில் எரிபொருள் மானியம் வழங்கப்படும்.

இந்த மானியம் மீனவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படும்.

மீன்பிடித் தொழிலை, நிலை பேறான மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், அதன் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் நுகர்வோருக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## யா/யூனியன் கல்லூரியின் வாழ்த்து




வடக்கு மாகாண ஆளுநராக
பதவியேற்கும்
ஓய்வுநிலை அரச அதிபர்
உயர்திரு.
**நா.வேதநாயகன்**
அவர்களை
வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

வடக்கு மாகாணத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களில் அரச அதிபராகக் கடமையாற்றிய அனுபவம்மிக்கவரும் ஊழல் அரசியல் தலைமீடுகளுக்கு அடிபணியாது தனது பணியைச் செவ்வனவே செய்த சீர்மையாளனும் தமிழ் மக்களின் துயர் துடைக்க தன்னால் இயன்ற சேவையாற்றிய பெருந்தகையும் எமது யூனியன் அன்னையின் வளர்ச்சியில் அன்று தொட்டு இன்றுவரை அக்கறையோடு செயற்பட்டு வருபவருமான உயர்திரு. நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் வடக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமனம் பெறுவதனையிட்டு அவரது சேவைக்கு கிடைத்த கௌரவமாக வாழ்த்தி அக மகிழ்கின்றோம். தொடர்ந்தும் உங்களது சீர்மைமிகு சேவையினால் வட மாகாணம் எழுச்சி பெற வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(C-1268)

# கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)**

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசியபோட்டி கேள்வியின் [NCB] மூலம் நடாத்தப்படும்.
3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி,கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 01.10.2024 ஆம் திகதி முதல் 14.10.2024 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
6. 07.10.2024 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு முன் பெறுகைக் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
7. கேள்விகள் 14.10.2024 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இருபிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பொருட்களுக்கான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். 14.10.2024 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் [Bid Security] செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| Bid No | Description of work | Estimated Cost (Rs.) In Million without VAT | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/K/RDHS/ L.M/DGH/Q/ 2024/01 | Incurred for Renovation and Refurbishment of Paramedical Quarters, Family Quarters and Two storey female nursing Quarter at DGH Kilinochchi. | 13.57 Mn | 90 Days | C6 or C5 (Buildings) | 3,500.00 | 135,700.00 | Till 26.01.2025 |

தலைவர்
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி.
T.P 0212285932, Fax- 0212285931
E-mail : rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(C-1261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப், கோபா குழுக்கள் உட்பட 80 குழுக்கள் வரை இரத்து

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் ஊடாக கோப் மற்றும் கோபா குழுக்கள் உட்பட சுமார் 80 குழுக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள போதிலும் அரசியலமைப்பு பேரவை மாத்திரம் கலைக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் சபாநாயகர் எதிர்க்கட்சி தலைவர் மற்றும் ஏனைய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புதிய குழுக்கள் நியமிக்கப்படும் வரை அதன் உறுப்பினர்களாக மாத்திரம் செயற்பட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக முன்னாள் அமைச்சர் நிமல்சிறிபால டீ சில்வா செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் சபாநாயகர், பிரதி சபாநாயகர், பிரதிநிதிகள் குழுக்களின் தலைவர், சபை முதல்வர் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஆகிய பதவிகள் இரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பரீட்சைக்கு பாதிப்பு ஏற்படாமல் பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குக் குறுகிய காலப்பகுதியே காணப்பட்டாலும் அதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்(நி)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாய் மேற்கு மண்டானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.
**கணேசன் கிருசிகன்**
(ஹாட்லி கல்லூரி மாணவன்)

மலர்வு 18.08.2005
உதிர்வு 01.10.2021

மூச்சிழந்த உடலாய் இங்கே வருடங்கள் மூன்றில்
நீயில்லா பொழுதுகளுடன் நிதம் நாமும்
நிலையில்லா இவ்வுலகில் நின்று தவிக்கிறோமைய்யா...
எம் குலத்தின் தலைமகனே! எங்கய்யா சென்று விட்டாய்?
போட்டியின் நாயகனே! உன் புகழ் மறையவில்லை
உன் அழகு முகம் காண எம் விழி மறுத்ததில்லை
கண்ட கனவெல்லாம் இன்று காலனவன் காலடியில்
கதைத்த கதைகளெல்லாம் காதோரம் எதிரொலிக்குதய்யா...
காலம் எம் நெஞ்சை தேற்றுமா?
காயம் தனை ஆற்றுமா?
எம் உள்ள குமுறலை உன் செவி தீண்டவில்லையா?
நகரும் நரக பொழுதில் நடைப்பிணமாய் நடமாடுகிறோம்
ஐயா... ஓடோடி வந்து விடு.. எம்மோடு கலந்த விடு
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

உன் வதனம் காண ஏங்கும்
அன்பு அத்தைமார்கள்

(2125)

## கண்ணீர் அஞ்சலி



வலம்புரி பத்திரிகை நிறுவனத்தின் பொது முகாமையாளர் திரு. மாவை நா. கஜேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.
**நவமணி நாகேந்திரம்**

அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
வலம்புரிக்குடும்பம்.


# இராசிபலன்

27.09.2024
புரட்டாதி 11, வெள்ளிக்கிழமை
தசமி பிற்பகல் 5.27 மணிவரை

பூசம் பின்னிரவு 5.32 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

சந்திராஷ்டமம்: கேட்டை

வளவன்

**மேஷம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம்.

**துலாம்** குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கிச் செல்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**ரிஷபம்** பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கும்பம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், ஆரோக்கியம் சீராகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், யோகமான நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**தனுசு** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆசைகள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள்.

இன்று செய்யக் கூடியதை நாளை என்று ஒத்தி வைக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக செம்மலின் நினைவேந்தல் நிகழ்வுகள்



## புதுக்குடியிருப்பில்...

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 37 ஆம் ஆண்டு நினைவு நாளானது புதுக்குடியிருப்பு சந்தை பகுதியில் இடம்பெற்றிருந்தது.

புதுக்குடியிருப்பு வர்த்தகச் சங்க தலைவர் நீதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த அஞ்சலி நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள், பொதுமக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர். (6-299)

## மன்னாரில்...

(மன்னார்)

தியாக தீபம் திலீபனின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் காலை 10.30 மணியளவில் மன்னாரில் இடம்பெற்றது.

இதன் போது சுடர் ஏற்றப்பட்டு, மாலை அணிவித்து,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது மதத்தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-285)

## கிளிநொச்சியில்...

(கிளிநொச்சி)

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-315-316)

## தீவகத்தில்...

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி நிகழ்வு நேற்று முன்தினம் மாலை யாழ். தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் தீவகப் பகுதிகளின் முன்னெடுக்கப்பட்டது.

வேலணை நினைவுத்தூபி முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி ஊர்திப் பவனி தீவகத்தின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது திலீபனின் திரு வுருவப்படத்திற்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

அதிகமதிகமாக சுப பலன்களைத் தரும் பலமிகு
ஹந்தஹன
Handahana ராசி சுப பலன்
ரூ.மூன்று மில்லியன் சுப்பர் பரிசு வெற்றியாளர்



ஹந்தஹன 830 ஆவது சீட்டிழுப்பிலே ரூ.3,711,943.96ஐ வென்ற சுப்பர் பரிசு வெற்றியாளர்
அடுத்த மில்லியன் வெற்றியாளர் நீங்களா?



ராசி சுப பலன்
NLB பொருத்தி உங்களது மில்லியன் பரிசுக் கனவை நனவாக்கிடுங்கள்
NLB தேசிய லொத்தர்
வாழ்வின் கனவிற்கு – அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
(சி-2440)

## ரூ.50 ஆயிரம் பெறுமதியான விவசாய உபகரணங்கள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தில் தொடர்ச்சியாக விவசாய உபகரணங்கள் இரவு வேளைகளில் திருட்டுப் போவதாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக சந்திரபுரம் பகுதியில் உள்ள தோட்டமொன்றில் இருந்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இதுவரை திருட்டுச் சம்பவம் தொடர்பில் எதுவித தகவல்களும் வெளிவரவில்லை.

இதற்கு முன்னரும் எமது கிராமத்தில் மின் மோட்டர்கள் உள்ளிட்ட பெறுமதியான விவசாய உபகரணங்கள் திருட்டுப் போவது வழமையாகவுள்ளது.

இவ்வாறு திருட்டுகள் தொடர்வதாலும் திருட்டுச் சந்தேக நபர்கள் கைது செய்யப்படாமையாலும் விவசாயிகள் வாழ்வாதார ரீதியாக பெரிதும் பாதிப்படைவதாகக் கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (6-30)

## புடவைக் கடையினுள் புகுந்து அடாவடி

(கரணவாய்)

நெல்லியடி நகரில் அமைந்துள்ள புடவைக் கடை ஒன்றினுள் புகுந்து இனந்தெரியாத நபர்கள் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஆடைகள் மீது பெற்றோலினை தெளித்து விட்டு தப்பிச் சென்றுள்ளமை அங்கிருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-60)

## பசுமை அமைதி விருதுகள் விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

பசுமை அமைதி விருதுகளுக்கான சூழல் பொது அறிவுப் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணைய வழியூடாக ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி இரவு 7 மணி தொடக்கம் 8.30 மணி வரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரையிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் மட்டும் பங்குபற்ற முடியும்.

இலவசமாக இடம்பெறவுள்ள இப்பரீட்சையில் தோற்ற விரும்பும் மாணவர்கள் www.tamilnationalgreen.org எனும் இணைய முகவரியூடாக எதிர்வரும் 20.10.2024 இற்கு முன்பாக பதிவுகளை முன்னெடுக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர் அர்ச்சுனாவுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வைத்திய சாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவை எதிர்வரும் ஒக்டோபர் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.



வைத்தியர்களைத் தொலை பேசியில் அச்சுறுத்தியமை, பேசித்தொந்தரவு செய்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் இன்று சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி அ.யூட்சன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது வைத்தியர் அர்ச்சுனா சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்களை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்க தவறியமை, பிணை நிபந்தனைகளை மீறி செயற்பட்டமை காரணமாக வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் பிணை இரத்து செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேவேளை கடந்த தவணையில் வைத்தியர்களின் பிணையாளிகள் மன்றில் நேரில் தோன்றி, தம்மை பிணையாளிகளிலிருந்து விடுவிக்குமாறு கோரியமை குறிப்பிடத்தக்கது. (நி-33)


**லங்கா மஹறால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (366)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


# திலித்துடன் இணைந்தார் திலும்

(கொழும்பு)



முன்னாள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, திலித் ஜயவீர தலைமையிலான தாயக மக்கள் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

இதற்கமைய, தாயக மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளராக திலும் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (நி)

# பதவி விலகினார் லிட்ரோ நிறுவனத் தலைவர்

(கொழும்பு)



லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மேலும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை லிட்ரோ எரிவாயுவிற்குத் தட்டுப்பாடு இருக்காது என்றும் முதித பீரிஸ் தெரிவித்தார். (நி)




**ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**

**மஹாசண்டி ஹோமம்**

29.09.2024அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியிலிருந்து 11.00 மணி வரை மஹாசண்டி ஹோமம் நடைபெறும்.

**தேவஸ்தானம்** (2103)


## பெயர்மாற்ற அறிவித்தல்

56/10 சைவப் பாடசாலை வீதி கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை வசிப்பிடமாகவும் 30.04.2010 இல் பிறந்த எமது மகனாகிய குணசேகரம் நாயகபாலன் என்பவரது பெயரை குணசேகரம் நிரோஷன் எனப் பெயர்மாற்றம் செய்கின்றோம்.

எனவே இனிவரும் காலங்களில் இப் பெயரையே பயன் படுத்துவார் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**உண்மையுள்ள த. குணசேகரம்.** (2124)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**75, காரைநகர் வீதி, 1 ஆவது ஒழுங்கை, வட்டாரம்- 04**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, காரைநகர் , 01 ஆவது ஒழுங்கையிலுள்ள இல 75 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் S.நவரட்ணம் என்றே காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை நவரட்ணம் சண்முகதாஸ் ஆகியவர் தனது பெற்றோரான காலஞ்சென்ற சரவணமுத்து நவரட்ணமும் பெண் பொன்னம்மாவும் ஆகியவர்கள் தனக்கு நன்கொடையளித்து, தனது பேரில் நன்கொடை உறுதி நிறைவேற்றியிருந்தார் களென்றும் குறித்த உறுதி மற்றும் அதனோடு தொடர்புடைய ஆவணங்கள் யாவும் கடந்த யுத்த காலத்தில் அழிவடைந்துவிட்டதென்றும் குறித்த ஆவணங்கள் தொடர்பில் தேடிகண்டெடுக்க தான் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை என்றும் குறித்த ஆதனம் தனது பெயரில் நன்கொடை உறுதி நிறைவேற்றப்பட்ட காலம் தொடக்கம் தனது தங்கு தடையற்ற ஆட்சியிலும், கட்டுப்பாட்டிலுமே இருந்து வருகின்றது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 1209/30.09.2019 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

இராஜேஸ்வரன் இராஜ்குமார் ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1340/06.03.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த நவரட்ணம் சண்முகதாஸ் ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

இராசரத்தினம் பன்னீர்ச்செல்வமும் பெண் நாகேஸ்வரியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 1452/14.09.2020ஆம் இலக்க உறுதியால் குறித்த இராஜேஸ்வரன் இராஜ்குமார் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்.

வேலுப்பிள்ளை சுதேந்திரனும் பெண் சாந்தலட்சுமியும் ஆகியவர்கள் மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் 2268/23.01.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த இராசரத்தினம் பன்னீர்ச் செல்வமும் பெண் நாகராசேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்.

குறித்த வேலுப்பிள்ளை சுதேந்திரனும் பெண் சாந்தலட்சுமியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வேலுப்பிள்ளை சுதேந்திரனும்பெண் சாந்தலட்சுமியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**75, காரைநகர் வீதி, 1 ஆவது ஒழுங்கை, வட்டாரம்- 04**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, காரைநகர் வீதி, 1 ஆம் ஒழுங்கையிலுள்ள இல 75 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் S.நவரட்ணம் என்றே காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஓர் பகுதியினை சரவணமுத்து ஆனந்தகோபன் பெண் தெய்வசரோஜா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நா.முத்துவிணாயகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 54/ 07.12.1972ஆம் இலக்க உறுதியால் சரவணமுத்து நவரத்தினமும் பெண் பொன்னம்மாவும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த சரவணமுத்து ஆனந்தகோபன் பெண் தெய்வசரோஜா காலம் செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான சங்கீதா கட்லோ, சர்மிளா கோபன் டி குய்றோஸ், சஞ்சீவ் ஆனந்தகோபன் ஆகியோருக்கு முதுசமாக வந்தடைந்தது.

இராசரத்தினம் பன்னீர்ச்செல்வமும் பெண் நாகராசேஸ்வரியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றபட்ட 1338/ 06.03.2020ஆம் இலக்க உறுதியால் குறித்த சங்கீதா கட்லோ, சர்மிளா கோபன் டி குய்றோஸ், சஞ்சீவ் ஆனந்தகோபன் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

நவரட்ணம் சண்முகதாஸ் ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் மற்றைய பகுதியினை தனது பெற்றோரான காலஞ்சென்ற சரவணமுத்து நவரட்ணமும் பெண் பொன்னம்மாவும் ஆகியவர்கள் தனக்கு நன் கொடையளித்து, தனது பேரில் நன்கொடை உறுதி நிறைவேற்றியிருந்தார்களென்றும் குறித்த உறுதி மற்றும் அதனோடு தொடர்புடைய ஆவணங்கள் யாவும் கடந்த யுத்த காலத்தில் அழிவடைந்து விட்ட தென்றும் குறித்த ஆவணங்கள் தொடர்பில் தேடிக்கண்டெடுக்க தான் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை என்றும் குறித்த ஆதனம் தனது பெயரில் நன்கொடை உறுதி நிறைவேற்றப்பட்ட காலம் தொடக்கம் தனது தங்கு தடையற்ற ஆட்சியிலும், கட்டுப்பாட்டிலுமே இருந்து வருகின்றது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 1209/30.09.2019ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

இராஜேஸ்வரன் இராஜ்குமார் ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1340/06.03.2020ஆம் இலக்க உறுதியால் குறித்த நவரட்ணம் சண்முகதாஸ் ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

இராசரத்தினம் பன்னீர்ச்செல்வமும் பெண் நாகேஸ்வரியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 1452/14.09.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த இராஜேஸ்வரன் இராஜ்குமார் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும உரித்தும் உடையவரானார்கள்.

தியாகராசா சுரேஸ்குமார் பெண் இராஜலட்சுமி ஆகியவர் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் 2475/ 10.12.2021ஆம் இலக்க உறுதியால் குறித்த இராசரத்தினம் பன்னீர்ச்செல்வமும் பெண் நாகராசேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த தியாகராசா சுரேஸ்குமார் பெண் இராஜலட்சுமி ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றும் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தியாகராசா சுரேஸ்குமார் பெண் இராஜலட்சுமி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 591





"ஆம் நாங்கள் தூதர்கள் தான்! துக்கச் செய்தி கொண்டு வருகிறோம். இளவரசர் அருள்மொழிவர்மர் ஏறி வந்த கப்பல் சுழற்காற்றில் அகப்பட்டுக் கொண்டதாம். இளவரசர் யாரையோ காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்து மூழ்கிப் போய்விட்டாராம்!"

குதிரை மீது வந்தவர்களில் ஒருவன் இவ்வாறு கூறியதும் அந்த ஜனக்கூட்டத்தில் "ஐயோ! ஐயகோ!" என்ற பரிதாபக் குரல்கள் நெஞ்சைப் பிளக்கும்படியான சோகத் தொனியில் எழுந்தன. எங்கிருந்து தான் அவ்வளவு ஜனங்களும் வந்தார்களோ, தெரியாது. அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் எப்படி வந்து சேர்ந்தார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆண்களும், பெண்களும், வயோதிபர்களும், சிறுவர் சிறுமிகளும் அந்தத் தூதர்களைப் பெருங் கூட்டமாகச் சூழ்ந்து கொண்டார்கள். பலர், அவர்களைப் பல கேள்விகள் கேட்டார்கள் பலர் அழுது புலம்பினார்கள்.

பழுவேட்டரையர்கள் அருள்மொழிவர்மரை விரும்பவில்லையென்பது அந்நகர மக்களில் பலருக்கு ஏற்கனவே தெரியும். இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்காகப் பழுவேட்டரையர்கள் ஈழத்துக்குள் ஆள் அனுப்பியிருக்கிறார்கள் என்ற பிரஸ்தாபமும் அவர்கள் காதுக்கு எட்டியிருந்தது எனவே, கூட்டத்தில் பலர் பழுவேட்டரையர்களைப் பற்றி முதலில் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். பிறகு உரத்த குரலில் சபிக்கவும் தொடங்கினார்கள்.

"பழுவேட்டரையர்கள் வேண்டுமென்றே இளவரசரைக் கடலில் மூழ்கடித்துக் கொன்றிருக்க வேண்டும்!" என்றும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். அந்த ஜனக் கூட்டத்தார் பேசிக்கொண்ட சத்தமும், அவர்கள் புலம்பிய சத்தமும், பழுவேட்டரையர்களைச் சபித்த சத்தமும் சேர்த்துச் சமுத்திரத்தின் பேரிரைச்சலைப் போல் எழுந்தது.

இந்தக் கூட்டத்துக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்ட தஞ்சாவூர்த் தூதர்கள், மேலே அரண்மனைக்குப் போக முடியாமல் தவித்தார்கள். ஜனங்களை விலக்கிக் கொண்டு போக அவர்கள் முயன்றும் பலிக்கவில்லை. "எப்படி?" "எங்கே?" "என்றைக்கு?" "நிச்சயமாகவா?" என்றெல்லாம் ஜனங்கள் அத்தூதர்களைக் கேட்ட வண்ணம் மேலே போக முடியாதபடி தடை செய்தார்கள்.

வைத்தியர் மகனுடன் வந்திருந்த காவலர்களைப் பார்த்து ஆழ்வார்க்கடியான், "நீங்கள் ஏன் சும்மா நிற்கிறீர்கள்? கூட்டத்தை விலக்கித் தூதர்களை அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்!" என்றான். காவலர்களும் மேற்படி செய்தி கேட்டுக் கதி கலங்கிப் போயிருந்தார்கள். அவர்கள் இப்போது முன்வந்து தூதர்களுக்கு வழி விலக்கிக் கொடுக்க முயன்றார்கள். தூதர்கள் சிறிது சிறிதாக அரண்மனையை நோக்கி முன்னேறினார்கள். ஜனக் கூட்டமும் அவர்களை விடாமல் தொடர்ந்து சென்றது. மேலும் மேலும் ஜனங்களின் கூட்டம் பெருகிக் கொண்டும் வந்தது.

அவ்வளவு பெரிய ஜனக் கூட்டத்தில், ஒரே மனதாக இளவரசர் அருள்மொழிவர்மரின் கதியை நினைத்துக் கலங்கிப் புலம்பிக் கொண்டிருந்த அக்கூட்டத்தில், ஒரே ஒரு பிராணி மட்டும், "ஐயோ! இது ஏதோ சூழ்ச்சி! ஒற்றனைத் தப்பித்துவிடச் சூழ்ச்சி!" என்று அலறிக் கொண்டிருந்தது. அவ்வாறு அலறிய வைத்தியர் மகனை யாரும் பொருட்படுத்தவில்லை. அவனுடைய கூக்குரல் யாருடைய செவியிலும் ஏறவில்லை. மாநதியின் பெருவெள்ளம் அதில் விழுந்து விட்ட சிறு துரும்பை அடித்துக் கொண்டு போவது போல் அந்தப் பெரும் ஜனக்கூட்டம் வைத்தியர் மகனையும் தள்ளிக் கொண்டு முன்னே சென்றது.

ஜனக்கூட்டம் சேரத் தொடங்கியபோதே வந்தியத்தேவன் குதிரை மேலிருந்து இறங்கிவிட்டான். கூட்டம் நகரத் தொடங்கியபோது, ஆழ்வார்க்கடியான் அவன் அருகில் வந்து அவன் கையைப் பற்றிக்கொண்டான். "குதிரையை விட்டு விடு! பிறகு அதைத் தேடிப் பிடித்துக் கொள்ளலாம். உடனே என்னுடன் வா!" என்று அவன் காதோடு சொன்னான்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## எத்தன் செய்த தந்திரம்

ஒரு சமயம் பக்கத்து பக்கத்து கிராமத்தில் இரண்டு திருடர்கள் வசித்து வந்தனர். இருவரும் பலே திருடர்கள். இவர்கள் இருவரும், சமயம் கிடைக்கும் போதெல்லாம், ஒருவரை ஒருவர் ஏமாற்றப் பார்ப்பது வழக்கம்.

ஒரு நாள், வணிகர் ஒருவர் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்ட கொமுரு என்ற திருடன், "அவர் வீட்டிற்குச் சென்றால் ஏதாவது சுருட்டலாம்" என்று நினைத்து அங்கே சென்றான். வணிகர் பெரும் பணக்காரர். அதனால், அங்கு ஏகப்பட்ட கூட்டம் இருந்தது. அங்கு சென்று ஒரு ஓரமாய் உட்கார்ந்த அவன், சற்றுத் தொலைவில் கூட்டத்தோடு கூட்டமாய் நின்றிருந்த எத்தனைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான்.

இந்த எத்தனும் கூட நம்மைப் போலவே இந்த வீட்டில் திருட வந்துள்ளான் என்பதைப் புரிந்துகொண்ட கொமுரு, அவன் எப்படி இங்கிருப்பவர்களை ஏமாற்றித் திருடப் போகிறான் என்றுதான் பார்ப்போமே என்று, கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான். வீட்டின் உள்ளே உள்ள ஒரு இருட்டறையில், ஒரு பெரிய கட்டிலின் மீது, வணிகரின் உடல் கிடத்தப்பட்டிருந்தது. அந்த அறைக்குள், மினுக் மினுக் கென்று ஒரு விளக்கு மட்டும் வெளிச்சம் காட்டிக் கொண்டு இருந்தது. வணிகர் கிடத்தப்பட்டிருந்த கட்டிலுக்குக் கீழே ஒரு பெரிய மரப்பெட்டி கேட்பாரற்றுக் கிடந்தது. கூட்டத்தோடு கூட்டமாய் நின்றிருந்த எத்தன் இப்போது, மெல்ல அந்தக் கட்டிலின் ஓரமாகச் சென்று, தான் கொண்டு வந்த மாலையை, வணிகர் மீது போட்டான்.

பிறகு, தன்னை யாராவது பார்க்கின்றனரா என்று சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டான். யாரும் பார்க்கவில்லை என்று தெரிந்து கொண்டதும், கட்டிலுக்குக் கீழே உள்ள மரப்பெட்டிக்குள் வேகமாக புகுந்து கொண்டு விட்டான்.

எத்தனின் இந்தச் செய்கைகளை எல்லாம், சற்றுத் தொலைவில் இருந்தவாறு வைத்தகண் வாங்காமல் கொமுரு பார்த்துக் கொண்டிருந்தான். இறந்து போய்க் கட்டிலில் கிடந்த வணிகர், இப்போது திடீரெனப் பேசத் தொடங்கினார்.

அங்கிருந்த எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம். வணிகரா பேசுகிறார்! வணிகரைப் போல் குரலை மாற்றி, அந்தக் கட்டிலின் கீழே கிடந்த மரப்பெட்டிக்குள் புகுந்திருந்த எத்தனல்லவா இப்படிப் பேசுகிறான். வணிகர் பேசத் தொடங்கியதும், அந்த வீட்டின் அழுகுரல்கள் அனைத்தும் இப்போது ஓய்ந்து போயின.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக்கொள்ளுங்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் ஆளுநராக ஒரு சிங்களவர் இருந்தால்...

வடக்கு மாகாண ஆளுநராக நியமனம் பெற்றுள்ள ஓய்வுநிலை அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்களுக்கு முதற்கண் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடக்கு மாகாணத்துக்கு தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற தமிழ் அரசியல்வாதிகளின் கோரிக்கையின் அடிப்படையில், அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்தின் ஆளுநர்களாக தமிழர்கள் நியமிக்கப்படுவது வழமையாக உள்ளது.

இருந்தும் இதுவிடயத்தில் எமது தனிப்பட்ட கருத்து; சிங்களவர் ஒருவரையே வடக்கின் ஆளுநராக நியமிக்க வேண்டும் என்பதாகும்.

இதை நாம் கூறும்போது அதனை, தமிழ் ஆளுநர்களுக்கு எதிரானதாக எவரும் கருதி விடக்கூடாது.

மாறாக, சிங்களவர் ஒருவர் வடக்கின் ஆளுநராக நியமிக்கப்படும்போது, அவர் வினைத்திறனுடைய நிர்வாகத்தை ஆற்ற முடியும்.

அதேவேளை வடபகுதி மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து சம்பந்தப்பட்ட விடயத்தை தீர்த்து வைப்பதும் சிங்கள ஆளுநரால் இயலக்கூடியதே.

இவை யாவற்றையும் கடந்து, ஒரு சிங்களவர் வடக்கின் ஆளுநராக இருக்கும்போது வடக்கு மாகாண சபைக்குட்பட்ட அரச அமைப்புகள் உச்சமான வினைத்திறனுடன் செயற்படும் என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் தமிழர் ஒருவர் வடக்கின் ஆளுநராக இருக்கும்போது, அவரால் இறுக்கமான முடிவுகளை எடுப்பது கடினமாக இருப்பதுடன் பழைய செல்வாக்குகள், பழைய நட்புகள் தலைதூக்கும்.

அதேநேரம் இறுக்கமான நடவடிக்கையை எடுக்கும்போது அதனைப் பழிவாங்கலாக நம்மவர்கள் சித்திரிப்பர்.

இது பிரஸ்தாப ஆளுநரின் இயங்கு நிலைக்குப் பாதகமாக அமையும்.

தவிர, வடக்கு மக்களின் பிரச்சினைகளை ஒரு தமிழ் ஆளுநர் மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லும்போது, அதனை சிங்கள அரசும் அதிகாரிகளும் பார்க்கின்ற கோணம் வேறாகவே இருக்கும்.

இதனாலேயே வடக்கின் ஆளுநராக சிங்களவர் ஒருவர் இருப்பது உத்தமமானது என்கிறோம்.

இதைக்கூறும்போது, தமிழர்களை தென் பகுதி மாகாணங்களுக்கு ஆளுநராக நியமிக்கும்போது அவர்களும் கண்ணியத்துடன் கடமையாற்ற முடியும். இன சமத்துவமும் பேணப்படும்.

பரவாயில்லை. நியமனம் நடந்தாயிற்று. எனவே வடக்கின் புதிய ஆளுநர் தனது பதவிக்காலத்தில், வட மாகாணத்திலுள்ள ஏழை மக்களின் உயர்வுக்காக செயலாற்ற வேண்டும்.

ஏழைப் பிள்ளைகள் உயர்படிப்பை மேற்கொள்வதற்கு உதவ வேண்டும். இதுவே எங்களின் தாழ்மையான கோரிக்கை.

## முறைகேடாகப் பயன்படுத்திய வாகனங்களை
# அத்தியாவசிய சேவைகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி பணிப்பு

கடந்த ஆட்சிகளில் பயன்படுத்திய சொகுசு வாகனங்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உரிய அதிகாரிகளுக்குப்பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவது வருத்தமளிப்பதாகவும், இது தொடர்பில் முழுமையான மீளாய்வு நடத்தி எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார்.

காலிமுகத்திடல்வளாகம் உட்பட பல இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கும் வகையில் அந்த இடத்தில்நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் ஆனந்த விஜேபால இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், பொதுமக்களின் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும், முறைகேடாகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறித்து முழுமையான ஆய்வு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த வாகனங்களை அத்தியாவசியமான சேவைகளுக்கு வழங்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட 59 வாகனங்கள் ஜனாதிபதி அலுவலகத்தினூடாகத் தனது நண்பர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர், வாகன இறக்குமதி தடை செய்யப்பட்ட காலப்பகுதியில் மாத்திரம் 16 வாகனங்கள் ஜனாதிபதி அலுவலகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள 833 வாகனங்களில் 29 வாகனங்கள் காணாமல் போயுள்ளதாகவும் இது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பணித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## கர்ப்பிணி ஆசிரியையும் கணவரும் விபத்தில் மரணம்

(மாத்தறை)

மாத்தறை அக்குரஸ்ஸ சியம்ப லாகொட பிடபெத்தர வீதியில் போபகொட சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை (26) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் கர்ப்பிணி ஆசிரியையும் அவரது கணவரும் உயிரிழந்துள்ளதாக அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

பிடபெத்தரை, மெதிரிபிட்டிய பாடசாலையில் கிடைத்த பரிசில்களுடன் மோட்டார் சைக்கிளில் மகதுரையில் உள்ள தமது வீட்டை நோக்கி கணவருடன் பயணித்துள்ளனர்.

பிடபெத்தரவை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தனது சொகுசு வேனில் அக்குரஸ்ஸ பகுதியிலிருந்து பிடபெத்தரை நோக்கி பயணித்த போது வேனை கவிழ்த்து அருகில் உள்ள மண்ணில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மகடூர பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான பாக்யா பொரலஸ்ஸ மற்றும் அவரது கணவர் இந்திக்க சம்பத் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## கிளிநொச்சியில் மரக்கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு

### ஒருவர் கைது

கிளிநொச்சியில் சட்டவிரோத மரக்கடத்தல் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தர்மபுரம் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்காக சூட்சுமமான முறையில் கப்ரக வாகனத்தில் முதிரைக் குற்றிகள் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் பொலிஸார் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 60 லட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகளை கடத்திய வாகனச் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முதிரைக்குற்றிகள் கொண்டு செல்வதற்கு பயன்படுத்திய கப் ரக வாகனத்துடன் சந்தேக நபரை இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சாலிய விக்ரமசூரிய தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அதன்படி, பெற்றோலிய கூட்டுத்தாபனம், சிலோன் பெற்றோலியம் சேமிப்பு முனையங்கள் மற்றும் டிரின்கோ பெற்றோலியம் டெர்மினல் ஆகிய மூன்று நிறுவனங்களின் தலைவர் பதவிகளில் இருந்து அவர் இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

புதிய அமைச்சருக்கு தாம் விருப்பமான சபையொன்றை நியமிப்பதற்கு சுதந்திரம் வழங்குவதற்காக அவர் தனது பதவிகளை இராஜினாமா செய்வதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

### பண்டத்தரிப்பில்
## இளம் குடும்பப் பெண் நேற்றுச் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு வடலியடைப்பில் இளம்குடும்பப் பெண் ஒருவர் நேற்று சடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான பாலச்சந்திரன் சங்கீதா (வயது-33) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7)

## பொதுத் தேர்தல் தொடர்பில் அச்சம் வேண்டாம்

### தேர்தல்கள் ஆணைக்குழு

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தமக்கு ஒதுக்கப்படும் வாக்களிப்பு நிலையத்தில் வாக்கினைப் பதிவு செய்வதற்கு நியாயமான அச்சம் காணப்படுமாயின் அவ்வாறானவர்கள் பிறிதொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான அனுமதியினை கோரமுடியுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு அனுமதி கோருபவர்கள் தேர்தல் ஆணைக்குழு அலுவலகம் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியுமென அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 1ஆம் திகதிக்கு முன்னதாக சம்பந்தப்பட்டவர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வித்தகருக்கு மானிப்பாய் இந்துவில் சிலை

மானிப்பாய் இந்துக் கல்லூரி வலிகாமக் கல்விவலயத்தின் ஒரே ஒரு தேசிய பாடசாலையாகும். கம்ப வாரிதி ஜெயராஜ் நொதேர்ன் யுனி நிறுவுநர் பத்மநாதன் இந்திரகுமார் போன்ற பல பிரபலங்களையும் பல்வேறு வைத்திய நிபுணர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்குவதில் இக் கல்லூரி ஒரு நூற்றாண்டு கடந்த பெருமையையும் உடையது. இவை யாவற்றையும் விட மேலான சிறப்பு முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலானந்தரை அதிபராக ஏற்று மாண்புடன் வளர்த்த பெருமையையும் இக்கல்லூரி கொண்டாடிருப்பதுடன் அவருக்கு சிலையமைத்து மதிப்பை வழங்கும் பேற்றையும் பெற்றிருக்கின்றது.

2024ஆம் ஆண்டிற்கான முத்தமிழ் விழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபரும் பழைய மாணவருமாகிய துரைரட்ணம் திலீப் குமார் தலைமையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சி.சிறிசற்குணராஜாவை பிரதம விருந்தினராகவும் கொண்டு வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறது. இந் நன் நாளிலே கல்லூரியின் கணித ஆசானும் கைதேர்ந்த சிப்பியும் ஆகிய கோபிஸ் கண்ணாவின் கை வண்ணத்தில் ஆறடி உயரமான முழு உருவச்சிலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப் படுகின்றது. இச் சிலைக்கான அனுசரணையை கல்லூரியின் பழைய மாணவர் நந்தகுமார் அபிராமி தம்பதியர் வழங்கியிருக்கிறார்கள்.

விலைவாசி ஏற்றம் கண்டுள்ள இக்கால கட்டத்திலும் விலை மதிப்பற்ற தமிழ் மகனுக்கு சிலையமைத்து சுவாமி விபுலானந்தரின் ஊர்திப்பவனி நிகழ்த்தி முத்தமிழ் விழாவையும் கொண்டாடுவது என்பது சாதாரண விடயமல்ல. கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் கடமை புரிந்து மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு பிரதி அதிபராக நியமனம்



பெற்று வந்து தற்போது அதிபராக கடமை புரியும் து. திலீப் குமாரின் அர்ப்பணிப்பும் ஆளுமையுமே இதற்குக் காரணம் எனலாம்.

இது ஒரு பிரம்மாண்டமான கலை நிகழ்வு என்பதால் கல்லூரியின் சகல வளங்களும் இதற்காக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பழைய மாணவர்கள் மனமுவந்து நிதிப்பங்களிப்பை நல்கியிருக்கிறார்கள். இக் கல்லூரிக்கே உரித்தான தனித்துவமான பாரம்பரியப்படி மருதடி விநாயகர் ஆலயத்தில் காலை பூஜையைத் தொடர்ந்து முன்னே சுவாமி விபுலானந்தரின் ஊர்தியும் அதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்கள் யாவரும் பங்கேற்கின்ற இன்னியம், காவடி, கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம், பொம்மலாட்டம் முதலிய தமிழ்க் கலை நிகழ்வுகள் ஊர்வலமாக நிகழ்த்தப்படுகின்றன. நீண்ட காலத்தின் பின் மீண்டும் பார்வையாளர்களுக்கு விருந்தாக இந் நிகழ்வுகள் அமைகின்றன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சமூகம் என்பது பரந்து விரிந்த பெரு விருட்சமாகும். விழா நாளில் வீதியெங்கும் வர்ணக் கொடிகள் அசைந்தாட கும்பங்கள் ஒளி வீச மக்கள் வெள்ளம் அலைமோத ஆடியும் பாடியும் அசைந்தும் வரும் அழகே அழகு. அதனைப் பார்க்க கண் கோடி வேண்டும்.

தற்கால மாணவர் சமூகம் காட்சியூடகங்களில் சிக்குண்டு கலைகளை இழந்துள்ளது. எழுத்து, வாசிப்பு இரண்டுமே விடை பெற்று பல வருடங்களாகி விட்டன. இவற்றை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதற்காக சகல மாணவர்களுக்கும் கையெழுத்துச் சஞ்சிகை போட்டி நடத்தப்பட்டுள்ளது. வெற்றி பெற்ற 200இற்கும் அதிகமான மாணவர்களுக்கு இன்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை மட்டுமன்றி 'சங்கத் தமிழ் சாரல்' எனும் சிறப்புச் சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

கல்லூரியின் பிரதான மண்டபத்திலே மல்லாடல், பேச்சு, பாட்டு முதலிய பல கலைநிகழ்வுகள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்றன. சிறப்பு நிகழ்ச்சியாக சொற்சமர் நாயகன் சொல்லருவி ச.லலீசன் தலைமை தாங்கும் பண்பாட்டில் பாது காவலர்கள் ஆண்களா? பெண்களா? எனும் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறுகின்றது. கல்லூரியின் பழைய மாணவர்களும் சொற்சமர் விவாதிகளும் பங்கேற்கும் இனிய நிகழ்ச்சியாகும்.

மொத்தத்தில் பல்கலைகள் சங்கமிக்கும் பார் போற்றும் நிகழ்வும், முத்தமிழை கௌரவிக்கும் சுவாமி விபுலானந்தரின் சிலை திறப்பும் வரலாற்றின் பக்கங்களில் பதியப்பட வேண்டியனவே.

நாக.தமிழிந்திரன்

## பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான அச்சிடும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முதற்கட்ட அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க ஊடகப் பிரிவின் அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான போதுமான ஆவணங்கள் அரசாங்க அச்சகத்தில் உள்ளது.



அந்தவகையில் தேர்தல் பணிகள் தொடர்பான வர்த்தமானிகள் போன்றவற்றை முதற்கட்டமாக அச்சிடும் பணியை அச்சகம் தொடங்கியுள்ளது என அரசாங்க ஊடகப் பிரிவின் அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார். (நி)

## ஊழல் மோசடிகள்! வெளிவரவுள்ள விபரங்கள்!

(கொழும்பு)

**மத்திய வங்கி மோசடி, ஏப்ரல் 21 தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்கள் போன்று மதுபானசாலை அனுமதி பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியலும் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

300 இலட்சம் ரூபாய் முதல் 400 இலட்சம் ரூபாயிற்கு மது பானசாலை அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்தவர்கள் உள்ளனர். அவர்களின் விபரங்கள் எம்மிடம் உள்ளன.

ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகள் நடத்தப்படும்.

அத்துடன் அவ்வாறான சகல தரப்பினர் தொடர்பான விபரங்களும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)

## பகிடிவதைகளை இல்லாதொழிக்க வழிகாட்டுதல்கள் - சட்டமா அதிபர்

(கொழும்பு)

அரச பல்கலைக்கழகங்களில் உள்ள பகிடிவதைகளை இல்லாதொழிக்க வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அரச பல்கலைக்கழகங்களில் போக்கிரித்தனத்தை ஒழிப்பதற்கான தொடர் வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதற்கான உத்தரவினைக்கோரி, 2020 ஆம் ஆண்டு ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதை சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மனுவொன்று, ஜயந்த ஜயசூரிய, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா, அரச பல்கலைக்கழகங்களில் நிகழும் பகிடிவதை சம்பவங்களைத் தடுப்பதற்காக தொடர் வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

வழிகாட்டுதல்களின் தொடர் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும் என்றும், ஏதேனும் திருத்தங்கள் முன்மொழியப்பட்டால், அவர்களும் அவற்றைப் பெற்று இறுதி வரைவைத் தயாரிக்க வேண்டும் என்றும் தலைமை நீதிபதி குறிப்பிட்டார். இறுதி வரைவை தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது பகிடிவதை என்ற போர்வையின் கீழ் பாரவூர்த்தி டயர் ஒன்றினை உருட்டும் போது தலை மற்றும் மூளையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், இதன் காரணமாக தாம் சுமார் மூன்று மாதங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தச் சட்டத்தின் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வழங்குமாறும், பல்கலைக்கழகங்களில் நிகழும் பகிடிவதை சம்பவங்களைக் களைவதற்கு தொடர் வழிகாட்டுதல்களைத் தயாரிக்க உத்தரவிடுமாறும் மனுதாரர் கோரியமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

பட்ட சிப்பியாறு அந்தோனியார் ஆலய வளாகத்தின் பின் பகுதியில் உள்ள சிற்றாலயத்திற்கு முன்பாக தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிலங்குளம் முதலைக் குத்தி பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான அந்தோனி தெய்வீகன் (வயது-45) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். (ம-7,285)

## பண்ணையில்...

விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவைச் சேர்ந்த இலட்சுமி காந்தன் தனஞ்செயன் (வயது-36) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சிற்ப வேலை செய்து வரும் மேற்படி குடும்பஸ்தர் யாழ்ப்பாணத்தில் இருந்து மண்டைதீவு நோக்கி மோட்டார் சைக்கிளில் கடந்த 15 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் சென்று கொண்டிருந்த போது பண்ணைப் பாலத்துக்கு அருகாமையில் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## இன்று முதல்...

அவர் மேலும் தெரிவிக்கையில், VFS நிறுவனத்துக்கு விசா வழங்கும் வசதி வழங்கப்பட்டதால், மக்கள் மிகவும் அவதிப்பட்டனர். குறிப்பாக இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் விசா பெறுவதில் சிக்கல் நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

எனவே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டால், நீதிமன்றத் தீர்ப்பின்படி, கடந்த 24 மணி நேரத்திற்குள், பழைய முறைப்படி விசா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி நள்ளிரவு 12.00 மணி முதல் எளிதாக விசா பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (ம-7)

## யாழ்.பல்கலை...

தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. (ம-7,33)

## பொருளாதார...

தின் தலைவர் மார்டின் ரயிஸர், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலய உப தலைவர் ரிகார்டோ புலிட் ஆகியோர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

தற்போது இலங்கையின் பொருளாதாரம் மீளக் கட்டமைப்பதற்கு தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கள் அவசியம் என்பதை அறிந்து கொண்டுள்ளதோடு, பொருளாதார வளர்ச்சி, செழுமை மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் ஒரே அளவான முக்கியத்துவத்தை கொண்டவை என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## அனுமதி...

சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

“300 இலட்சம் ரூபாய் முதல் 400 இலட்சம் ரூபாய்க்கு மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்தவர்கள் உள்ளனர். அவர்களின் விபரங்கள் எம்மிடம் உள்ளன.

ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகள் நடத்தப்படும். அத்துடன் அவ்வாறான சகல தரப்பினர் தொடர்பான விபரங்களும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## அரசியல்...

என பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அனைத்துத் திணைக்கள அதிகாரிகளுடன் நேற்றுக் காலை நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவது தற்போதைய அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

மேலும் புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு காரணமாக சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும் எனவும், வெளியாகியுள்ள விடயங்கள் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை சுயாதீன நிபுணர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ம-7)

## சாவகச்சேரியில்...

சேர்ந்த பாலசேகர் ஹரிபிரசாத் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 15ஆம் திகதி முல்லைத்தீவில் உள்ள கோவில் ஒன்றுக்கு நாதஸ்வரக் கச்சேரிக்குச் சென்றுள்ளார். பின்னர் 16ஆம் திகதி வீட்டுக்கு வந்து கொண்டு இருந்தவேளை சாவகச்சேரியில் உள்ள பாடசாலை ஒன்றின் மதில் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

படுகாயமடைந்த குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம்மாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## தியாகி...

வெழுச்சியுடன் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும்.

தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பனவே திலீபனின் கோரிக்கைகளாக அமைந்தன.

அந்தவகையில் தமிழின விடுதலைக்காய் 12 தினங்களாக நீராகாரம் கூட இன்றி அகிம்சை வழி நின்ற திலீபன் மௌனித்த நல்லூர்த் திடலில் பிரதான நிகழ்வு நேற்று காலை 10.48 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகியது இதனை முன்னிட்டுத் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி அவர் பிறந்த ஊரெழு மண்ணிலிருந்து நல்லூர் தியாகதீபம் நினைவுத் திடலை வந்தடைந்தது. இந்நினைவேந்தலில் பொதுமக்கள் முன்னாள் போராளிகள் மாவீரர்களின் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டு கண்ணீர் மல்க உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

அதேவேளை பார்த்தீபன் திலீபனாக திலீபன் தியாக தீபமாக எனும் தொனிப்பொருளில் திலீபனின் தியாகத்தினை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் வண்ணம் அருங்காட்சியகம் வழமை போன்று இவ் வருடமும் திலீபனின் நினைவுகளினை தாங்கியவாறு அமைந்திருந்தது

இதேவேளை தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களிலும் தியாக தீபத்துக்கு ஈகச்சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பிரித்தானியா, கனடா உள்ளடங்கலாக புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் திலீபன் நினைவேந்தப்பட்டார். (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2024.09.26
சீட்டிழுப்பு இலக்கம் 5607
B 3 6 0 8 3 4
அத சம்பத
B 0 8 3 4
சீட்டிழுப்பு இலக்கம் 182
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1637
O 21 42 57 58 O
Double Chance 49767

மெகா பவர்
திகதி 26/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1955
F 06 03 16 39 64
Double Chance 08999

லக்கி 7 VIP
திகதி 2024.09.26
சீட்டிழுப்பு இலக்கம் 0433
S 9 8 7 7 1 3 S

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3849
சீட்டிழுப்பு திகதி 26.09.2024
A 03 10 24 31
A 96212

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.26
சீட்டிழுப்பு இலக்கம் 916
தனுசு 17 20 30 59 தனுசு
29590 29

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.09.2024 வெற்றி வாரம் 315 வர்ணம் மஞ்சள்
S 7 2 1 3 0 4
52235
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,675,296.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2581 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 26.09.2024 தினம் வியாழன்
17 38 44 59 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,672,116.00

சனிதா
திகதி 2024.09.26 வெற்றி வாரம் 4742 வர்ணம் சிவப்பு
11 27 40 53 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,100,761.60
31224

சீட்டிழுப்பு வாரம் 4293 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.26 தினம் வியாழக்கிழமை
24 30 44 58 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,581,454.80
168563

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 37 04 22 48 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 546,951,540.20
1757
26.09.2024 வியாழன்

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2407
சீட்டிழுப்பு திகதி : 2024.09.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,674,854.40
அத கோட்டிபதி ADA KOTIPATHI
42 46 49 59 K
552155


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு.அ.கலைச்செல்வன்

(கணக்காளர்)



உலகின் முதற்தர பல்கலைக் கழகமான Oxford and Cambridge International U.K பல்கலைக்கழகத்தில் 31.10.2024 இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் நிதி முகாமைத்துவத் துறையில் கலாநிதி (Phd) பட்டம் பெற இருக்கும் எமது நண்பர் திரு.அ.கலைச்செல்வன் கணக்காளர் (கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் ஆளுநர் செயலகம்) அவர்களை மேன்மேலும் பட்டங்கள் பெற்று உலகம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(2132) ஆசிரிய நண்பர்கள்



நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் அவர்களை மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். (படம்: சிவசாந்தன்)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
28.09.2024

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** (Sri Lanka)
(AA1, AA 2, AA3)
G. C. E. O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF
(C-1264)

Certificate Course in English

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917



**Village Hotel**
Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை ⟹ கொழும்பு
யாழ்ப்பாணம் ⟹ கொழும்பு
இருவழிச் சேவை. (இரவு/ பகல்)

தொடர்புகளுக்கு: (1868)
077 544 8503



இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்பொழுது
9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
36,500/= இலிருந்து விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(380)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)


# வயோதிபரொருவர் சடலமாக மீட்பு

வீட்டில் தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பத்தானை, அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கனகரட்ணம் (வயது- 79) என்பவராவார்.

அவர் கடந்த 20 வருடமாகத் தனிமையில் வசித்து வந்துள்ள நிலையில் சில தினங்கள் நடமாட்டம் இல்லாததுடன் நேற்று வியாழக்கிழமை(26) வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசிய நிலையில் நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் அங்கு சென்ற போது அவர் உயிரிழந்து அழுகிய நிலையில் சடலமாக காணப்பட்டார். சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1263)



Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-1263)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 07 - 1947



மறைவு
23 - 09 - 2024

## கதிரேசு செல்வராசா (செல்வம்-ஆசாரி)

அம்பலவாணர் வீதி,உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு செல்வராசா அவர்கள் திங்கட்கிழமை (23.09.2024) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் சுப்பிரமணியம் - தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகனும் கௌசலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஈஸ்வரியம்மா, கனகநாயகம் மற்றும் நவரட்ணம்,செல்வரட்ணம், பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும் சைலயன் (Vishvakarma Civil Production (Pvt) Ltd- Director),சோபிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனார்த்தனனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கமலாம்பாள், தெய்வேந்திரராசா, சற்குணராசா மற்றும் குகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.09.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 384 6828

இல.131,அம்பலவாணர் வீதி,
உடுவில்,சுன்னாகம்.
(C-1260)

# நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலி

தோற்றம்
20 - 09 - 1952



மறைவு
26 - 09 - 2024

அமரர்

## இராமுப்பிள்ளை பாலசிங்கம்

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

என்பதற்கிணங்க எங்கள் நிறுவனத்தின் கால் நூற்றாண்டுக்கு மேல், நம்பிக்கை, நாணயம், உறுதிமிக்க ஓர் உண்மையான உழைப்பாளியாகத் திகழும் ரவிச்சந்திரன் அவர்களது தந்தையார் வழுப்போடை காரைநகர், களபூமி, காரைநகரில் காலமானார். மிதித்த இடத்துப் புல்லும் சாகாதபடி அமைதியாக தானுண்டு தன் வேலையுண்டென்று யாரையும் புண்படுத்தாமல் மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்துள்ளார். அவர் ஆத்மா இறைபாதத்திருந்து அமைதி காண ஈழத்துச் சிதம்பரம் தில்லைக்கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-1259)

க.கு.கந்தையாபிள்ளை & சன்ஸ் (K/K/K)
உரிமையாளர்கள், ஊழியர்கள், வகுப்புத் தொழிலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.